DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.83/2024 | Deposition of Witness for : PW1 |
| Name : கண்ணன் | Father/Husband Name : செல்லையா |
| Age : 35 | Village : மானாட்டூர் |
| Taluk : ஏரல் | Calling : கம்பி கட்டும் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07 April 2026.
Accused absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது மானாட்டுரில் குடியிருந்து கம்பி கட்டும் வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும், எதிர் வீட்டைச் சேர்ந்தவர். 29.10.2023 அன்று மாலை 5.30 மணியளவில் எனது வீட்டின் அருகே வசிக்கும் திவ்யா என்பவர் என்னிடம் தகராறு செய்து எனது வீட்டின் முன்பு உள்ள கழிவு நீரோட்ட கால்வாயில் எப்படி தண்ணீர் விடுவாய் என்று சொல்லி என்னிடம் தகராறு செய்தார். நான் அதை பொது இடம் தானே என்று கூறிக்கொண்டிருக்கும்போது இந்த வழக்கின் எதிரி திவ்யா மாடு மேய்க்கும் கம்பால் தலையில் தாக்கினார். அதில் நிலைதடுமாறி நான் கீழே விழுந்துவிட்டேன். பின்னர் எனது மனைவி எதிரியிடம் கேட்டபோது என்னுடைய மனைவியின் தலைமுடியை பிடித்து இழுத்து அவர் அணிந்திருந்த நைட்டியை பிடித்து கீழே தள்ளிவிட்டார். அப்போது எதிரி பொட்டப் பயலே என ஆபாசமான வார்த்தைகளால் பேசி அருவறுப்பை ஏற்படுத்தினார். எதிரி தாக்கியதால் மயக்கம் அடைந்த என்னை எனது மனைவி, என்னுடைய சித்தி சுமா, ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வைத்து என்னை ஸ்ரீவைகுண்டம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக என்னை அழைத்துச் சென்றார்கள். அப்போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2. நான் முதல் விசாரணையில் சொல்லியதைத்தான் போலீசார் விசாரணையிலும் மருத்துவரிடமும் கூறினேன் என்றால் சரிதான். என்னை வழக்கின் எதிரி மட்டும் தான் என்னை தாக்கியதாக மருத்துவரிடம் கூறினேன் என்றால் சரிதான். எதிரியின் மாமியார் காலத்தில் இருந்தே எதிரியின் குடும்பத்திற்கும் எங்களுக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக எதிரிக்கும் எனக்கும் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வீடு தாழ்வான


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.04.07 17:36:41 +0530

பகுதியிலும் எதிரியின் வீடு சற்று மேடான பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீட்டில் கோலம்போடும் போது தண்ணீர் தெளித்தால் கூட என் வீட்டின் முன்பக்கம் வரும் என்றால் சரிதான், ஆனால் மழை பெய்தாலும் என் வீட்டின் முன்பாகத்தான் தண்ணீர் வரும், கழிவு நீர் விடுவது சம்பந்தமாகத்தான் பிரச்சனை இருந்து வந்தது.

3. வழக்கு சம்பந்தம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நானும், முத்துமுருகன், ஆறுமுகநயினார் ஆகியோர்கள் சேர்ந்து எதிரியை கெட்டவார்த்தையால் திட்டியும், எதிரியின் கணவரை கம்பால் அடித்தும், அரிவாளால் இடது கையில் வெட்டியும் கொடுங்காயம் ஏற்பட்டு அதன் மூலம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் (CC 67/2024 U/s.294(b), 323, 326, 506(2) IPC) நாங்கள் மூன்று பேரும் இன்று கனம் நீதிமன்றத்தில் ஆஜரானோம் என்றால் சரிதான். CC 67/2024 என்ற வழக்கில் எதிரியின் கணவர் பாதிக்கப்பட்டு தற்போது வரை கையில் பிளேட் வைத்துக்கொண்டு ஊனமான நிலையில்தான் நடமாடி வருகிறார் என்றால் சரியல்ல. நான் எதிரியின் கணவரை தாக்கிவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நானாக காயத்தை ஏற்படுத்திவிட்டு எதிரி மீது பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஒரு நாள் காலதாமதம் ஆனது குறித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அன்றே போலீசார் விசாரித்தார்கள், அதற்கு அடுத்த நாள் 30.10.2023 அன்று சார்பு ஆய்வாளர் என்னிடம் வந்து வாக்குமூலம் பதிவு செய்தார். இந்த வழக்கில் ப.சா.2 என்னுடைய சித்தி என்றால் சரிதான். ப.சா.3 இசைகலா என்னுடைய மனைவி என்றால் சரிதான். ப.சா.4 முத்துமுருகன் என்பவர் CC 67/2024 என்ற வழக்கின் 3 ஆவது எதிரி என்றால் சரிதான். சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் நாளில் எதிரியின் 6 வயது குழந்தை முற்றம் தெளிப்பதற்காக தெளித்த தண்ணீர் என்னுடைய வீட்டு பக்கத்தில் வந்ததால் மதுபோதையில் நான் மற்றும் ப.சா.4 முத்துமுருகன் மற்றும் ஆறுமுக நயினார் ஆகியோர்கள் சேர்ந்து எதிரியை அரிவாளால் வெட்ட முற்படும்போது அதை எதிரியின் கணவர் தடுத்தபோது அவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டது, மீண்டும் அவரை அரிவாளால் வெட்டி கம்பால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்திவிட்டு அதில் ஏற்பட்ட வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நானாக காயத்தை உற்பத்தி செய்துவிட்டு பொய்யாக புகார் கொடுத்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி எதிரி எந்த குற்ற சம்பவமும் செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன மாதிரி உண்மையிலேயே வழக்கு சம்பவம் நடைபெற்றிருந்தால் போலீசார் எதிரியிடம் இருந்து கம்பை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பார்கள், அவ்வாறு சம்பவம் நடைபெறாததால் தான் போலீசார் வழக்கு சொத்துப் பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.07 17:36:47 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.07 17:36:52 +0530

Judicial Magistrate, Sathankulam.